**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 109/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராஜா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. நாகராஜ்** | **Calling** | : | **மரமில்லில் வேலை** |
| **Village** | : | **நல்லாம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **35** |
| | | | **Dated** | : | **18.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. ராஜா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மரமில்லில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் அருண்குமார் மற்றும் ஆறுமுகம் ஆகியோரை எனக்கு யார் என்று தெரியாது. கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்பாக KSOP பெட்ரோல் பங்கில் நான் கேசியராக வேலை செய்து கொண்டு இருந்தேன், அப்போது மதியம் 03.00 மணிபோல் சுமார் 5 மற்றும் 6 நபர்கள் மதுபோதையில் அங்கு வந்த என்னிடம் அவர்களுடைய இருசக்கர வாகனங்களில் பெட்ரோல் போடும்படியும், பணம் இல்லை என்றும் கூறினார்கள். அப்போது அவர்களுக்கும் எனக்கும்

வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது நான் தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். அப்போது எனக்கு இடது தொடையில் காயம் ஏற்பட்டு விட்டது. நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, என்னிடம் ஒரு எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் வாங்கிச் சென்றார்கள். எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்பம் புகார் வாக்குமூலத்தில் உள்ள ராஜா என்ற கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

கடந்த 26.01.2014ம் தேதி மாலை 04.00 மணிக்கு KSOP பெட்ரோல் பங்கில் நான் இருந்தேன் என்றும், அப்போது எதிரிகள் அருண்குமாரும், ஆறுமுகம் ஆகியோரும் பெட்ரோல் பங்கிற்கு வந்து, அவர்கள் வைத்திருந்த கேனில் 2 லிட்டர் பெட்ரோல் கேட்டார்கள் என்றும், பணம் இல்லை என்றும் சொன்னார்கள் என்றும், நான் மேலாளரிடம் கேட்டு வருகிறேன் என்று சொன்ன போது, அவர்கள் இருவரும் என்னை தடுத்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, அருண்குமார் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது நெஞ்சில் குத்த வந்தபோது, நான் இடது கையால் தடுத்தபோது, உள்ளங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அருண்குமார் கத்தியால் எனது இடது பக்க தொடையில் மீண்டும்

குத்தினார் என்றும், எதிரி ஆறுமுகம் இவன் இந்த குத்துக்கெல்லாம் சாகமாட்டான் என்று சொல்லி கையில் வைத்திருந்த அருவாளால் என் தலையில் ஓங்கி வெட்ட வந்தபோது, நான் விலகிக் கொண்டேன் என்றும், அருவாள் வெட்டானது அருண்குமாரின் தலையில்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் சத்தம் கேட்டு வருவதைப் பார்த்து அவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் கிசிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது நடந்த சம்பவங்களை புகார் வாக்குமூலமாக கூறிவிட்டு, தற்போது எதிரிகள் இருவரும் எனக்கு நன்கு தெரிந்தவர்கள் என்பதால், அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக வழக்கின் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 18.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.17 18:50:59 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**